Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 123

புதன்கிழமை 29 மார்ச் 2023

பங்குனி 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# தென்னாபிரிக்காவுக்குள் போர்க்குற்றவாளிகள்!

## இலங்கையிலிருந்து சென்ற குழுவுக்கு அங்கு வலுக்கின்றது எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 29

இலங்கையின் போர்க்குற்றத்துடன் தொடர்புடைய நபர்களை, நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதி தொடர்பில் அறிந்துகொள்வதற்காக தென்னாபிரிக்க அரசாங்கம் அழைத்துள்ளமை குறித்து அந்த நாட்டின் மனித உரிமை அமைப்புக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன. »15



வெடுக்குநாறிமலை ஆலய அழிப்பு

## நீதிகோரி நல்லூரில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவில் அழிக்கப்பட்டமைக்கு எதிராக நல்லூரில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. »15

## 'இலங்கை விடுதலையாகும்' இது கடவுளின் வாக்குறுதியாம்

ரணிலுக்குக் கதைவிட்ட போதகர் போல் தினகரன்

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக்கு கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்கும். பிற நாடுகளின் உதவியுடன் இலங்கை »09

வெடுக்குநாறிமலை ஆலய உடைப்பு

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆ.குழு கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வவுனியா, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து சூலங்கள் மற்றும் சிவலிங்கம் என்பன »15

நாவலர் கலாசார மண்டப விவகாரம்;


## ஆளுநருக்கு எதிராக முன்னணி போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகையில் இருந்த நாவலர் கலாசார மண்டபம், வடமாகாண ஆளுநரால் மத்திய அரசாங்கத்துக்கு »16

## போதை மாபியாக்களுடன் பொலிஸாருக்குத் தொடர்பா?

கிளிநொச்சி மாவட்டச் செயலக கலந்துரையாடலில் சுட்டிக்காட்டு விரிவு:- பக்.15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே பரவும் கண்நோய்

## பெற்றோரை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

**கொழும்பு, மார்ச் 29**

**தற்போது சிறுவர்களுக்கிடையே கண்சார்ந்த நோய் ஒன்று பரவி வருகின்றது. இதனால் இது தொடர்பில் பெற்றோர் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விஷேட மருத்துவர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.**



கண் சிவப்பாகுதல், கண்ணில் இருந்து நீர் வெளியேறுதல், கண் அரிப்பு மற்றும் இருமலுடன் தடிமன் போன்ற நோய் அறிகுறிகள் சிறுவர்களிடத்தில் காணப்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்த நோய் அறிகுறிகள் தென்படுமாயின் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் எனவும் அவ்வாறானவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறும் பெற்றோரிடம் அவர் கோரியுள்ளார்.

(ஒ-14,இ)

# இருப்பைத் துடைத்தெறிய ஆக்கிரமிப்பு அரங்கேற்றம்

*சட்டத்தரணி வி. மணிவண்ணன் கண்டனம்*

வவுனியா, மார்ச் 29



ஓர் இனத்தின் மொழியையும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் அழித்தால் அந்த இனம் தானாகவே அழிந்துவிடும் என்பதற்கு உட்பட்டே தமிழின அழிப்பு நடவடிக்கைகள் - ஆக்கிரமிப்புக்கள் எமது மண்ணில் வெவ்வேறு வடிவங்களில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

இவ்வாறு யாழ்.மாநகரசபை முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழர்களின் பண்பாட்டுப் பாரப்பரிய வாழ்விடங்களையும் வழிபாட்டு இடங்களையும் சிங்கள பௌத்தமயமாக்கலுக்கு உட்படுத்தும் வகையில் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் வவுனியாவின் வடக்கு எல்லைக் கிராமமான ஒலுமடு வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் உடைத்து எறியப்பட்டுள்ளன. சிவலிங்கம் புதருக்குள் வீசப்பட்டுள்ளது. இது வன்மைக்குரிய மிலேச்சத்தன செயலாகும். திட்டமிடப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியே இதுவாகும்.

குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளைகளையும் உதாசீனப்படுத்தி பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வரும் நிலையில் தமிழர்களின் பண்பாட்டுப் பாரம்பரிய வழிபாட்டுத்தலமான வெடுக்குநாறிமலையில் இருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் தகர்த்தெறியப்படுகின்றன. ஓர் இனத்தின் மொழியையும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் அழித்தால் அவ்வினம் தானாகவே அழிந்துவிடும். அதற்கு உட்பட்டே இவ்வாறான பண்பாட்டு இன அழிப்பு நடவடிக்கைகள் எமது மண்ணில் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து அரங்கேற்றப்படுகின்றன. இதற்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன் எமது இனத்தின் இருப்பைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு எதிர்ப்பை வெளிகாட்ட வேண்டும் - என்றுள்ளது.

(ச)



# வடக்கு மாகாண கால்கோள்விழா

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு மாகாண கால்கோள்விழா யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் தரம் ஒன்றுக்கு புதிதாக வருகை தந்த புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அருளம்பலம் உமா மகேஸ்வரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரேஸ் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(ஒ-14)

# விஷமிகளால் கடை தீக்கிரை; 7 லட்சம் பெறுமதியான சொத்தழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்குப் பகுதியில் புலசரக்குக் கடையொன்று இனந்தெரியாத விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கடையிலிருந்த ஐஸ்கிறீம் வகைகள், மென்பானப்பொருள்கள் மற்றும் குளிர்சாதனப்பெட்டி அடங்கலாக 40 லீற்றர் தேங்காய் எண்ணெய் ஆகியவை எரிந்து தீக்கிரையாகியுள்ளன எனவும் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்தழிவு ஏற்பட்டுள்ளது எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய பருத்தித்துறை குற்றத்தடுப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-23)

# இறக்குமதி முட்டைகளில் கேக் தயாரிக்கவேண்டாம்

*இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் வேண்டுகோள்*

கொழும்பு, மார்ச் 29

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளைப் பயன்படுத்தி கேக் தயாரிக்கவேண்டாம் என்று இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், கொழும்புத்துறைமுகத்துக்கு வந்த திரவ முட்டைகள் சுமார் ஏழு நாள்களாக விடுவிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அவை பழுதடைந்திருக்கலாம் என்ற அடிப்படையில், எதிர்வரும் புத்தாண்டுக்கு இந்த முட்டைகளைப் பயன்படுத்தி கேக் தயாரிக்கவேண்டாம் என்று வெதுப்பக உரிமையாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளேன். அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கேக்கைக் கொள்வனவு செய்யவேண்டாம் என்றும் மக்களுக்கு அறிவுறுத்துகிறேன்.

இந்த இறக்குமதி மூலம் சுங்கம் ஏற்றுமதி இறக்குமதி சட்டத்தை மீறியுள்ளது. எனவே பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் துறைமுகத்துக்குச் சென்று முட்டைகளின் நிலையை பரீட்சிக்க வேண்டும் - என்றார்.

(ஒ-14,இ)

# கிராமப்புறப் பாடசாலைகளும் சிட்டுக்குருவி வாழும் கூடுகளே

## மூத்த விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளும் சிட்டுக்குருவி வாழ்கின்ற அருமையான கூடுகள். பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டையும் சமய விழுமியங்களையும் கலாசார பண்பாடுகளையும் கட்டியெழுப்ப அருகிலுள்ள பாடசாலைகளில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன் தெரிவித்தார்.

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் தரம் 5 [illegible] பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோர் அதீத அக்கறை செலுத்தவேண்டும். மாணவர்களின் உடல், உளரீதியில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

தற்போது பெற்றோர் கிராமப்புறப் பாடசாலைகளைத் தவிர்த்து நகர பாடசாலைகளில் பிள்ளைகளை இணைப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

நாம் மற்றவர்களுடன் போட்டி பொறாமை கொள்ளக்கூடாது. எமது கிராமங்களில் இருக்கும் பாடசாலைகள் மிகவும் முக்கியமானவை.

அருகருகே இருக்கும் பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பதன் மூலம் உடல் அசதி உள்ளிட்டவற்றைதவிர்த்து கற்றலில் ஈடுபாடு செலுத்த வைக்க முடியும்.

அத்துடன் நிலவும் போக்குவரத்து , பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, உள்ளிட்டவற்றையும் போதியளவில் தவிர்க்கலாம்.

வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளும் சிட்டுக்குருவி வாழ்கின்ற அருமையான கூடுகளே. ஒவ்வோர் பிரதேச மக்களும் தனித்துவ மான பண்பாட்டை சமய விழுமியங்களை கலாசார பண்பாடுகளை கொண்டுள்ளோம். இவற்றை கட்டிக் காத்து கல்வியை மேம்பாடடையச் செய்யவேண்டும் - என்றார்.

(ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவெறியின் கர்மவினைகள் இந்த அரசுக்கும் வெளிப்படும்!

## சிறீதரன் எம்.பி. போராட்டத்துக்கு அழைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 29**

**காலம் காலமாக பொங்கல் செய்து வழிபட்டுக்கொண்டிருந்த ஆதிசிவன் ஆலயம் வெடுக்குநாறிமலையிலிருந்து தகர்த்தெறியப்பட்டுள்ளது. அந்த இடத்தில் புத்தர் சிலையை வைக்கவே இந்த மோசமான காரியம் நிகழ்த்தப்பட்டுள்ளது. இதன் கர்ம வினைகளை இந்த அரசாங்கம் விரைவில் எதிர்கொள்ளும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், வெடுக்குநாறி மலை விவகாரம் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியாவில் வெடுக்குநாறி பகுதியில் காலம் காலமாக வரலாற்று ரீதியிலே பாரம்பரியத்தோடு ஆதிசிவனை வழிபட்டு வந்த சைவத் தமிழ் மூதாதையர்களும் அந்த பரம்பரையும் அந்த மண்ணிலேயே இருக்கிறார்கள்.

அவ்வாறான வெடுக்குநாறி சிவனாலயமும் அந்தச் சிவனாலயத்தின் பரிபாலன தெய்வங்களான அம்மன், பிள்ளையார், வைரவர் போன்ற கடவுள்களுடைய சிலைகளும் அடித்து உடைத்து சிதைக்கப்பட்டுள்ளன.

வெடுக்குநாறி மலை என்பது தொல்பொருளுக்குரியதென்றும் அங்கு யாரும் பிரவேசிக்கவேண்டாம் என நீதிமன்றம் கட்டளையிட்டதற்கு அமைவாக கட்டளையை மதித்து ஆலய நிர்வாகத்தினரும் பக்தர்களும் அங்கு செல்லாத நிலையில் இந்த அட்டூழியம் புரியப்பட்டுள்ளது. அண்மையில் கச்சதீவிலும் புத்தரை குடியேற்றி பௌத்தமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இலங்கையினுடைய ஆட்சியாளர்கள் எங்கெங்கு பௌத்த சின்னங்களை வைக்க முடியுமோ அந்த இடங்களை ஆக்கிரமிக்க பெரும்பாடுபடுகிறார்கள் என்பதை இத்தகைய செயல்கள் மிகத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையிலே நீதிமன்றங்களால் எதுவும் செய்ய முடியாது. நீதிமன்றங்கள் அப்பாவிகளையும் அல்லது நீதிமன்றங்களுக்கு எதிராக பேசுபவர்களையும்தான் அடைக்க முடியும் என்ற சட்டம்தான் செல்லுபடியாகின்றது. இது இலங்கையில் இருக்கின்ற சட்டத்தை கேள்விக்குட்படுத்தியிருக்கின்றது.

இந்தக் காரியத்தை செய்தவர்கள் வாழ்நாள் பழிக்கு ஆளாகியுள்ளனர். தாங்கள் செய்த கர்மாவின் பயன் கோத்தாபயவின் காலத்தில் அவருக்கு வெளிப்பட்டிருந்தது. அதனைத் தாண்டி தற்போது ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்தும் பாதகச் செயல்களின் கர்மவினைகளையும் இந்த அரசாங்கம் விரைவில் சந்திக்கும்.

அதுவரை உருவச்சிலைகளை இருந்த இடங்களில் மீள வைக்கும்வரை தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இந்த விடயத்துக்காக குரல் கொடுப்போம். எதிர்வரும் வியாழனன்று மிகப்பெரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

அரசியல், கருத்து வேறுபாடுகளை ஒரு புறம் வைத்துவிட்டு பிடுங்கப்பட்ட சிலைகளை அதேயிடத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கும் வரை போராடுவதற்கு - குரல் கொடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைவோம் - என்றார். (ச-113)



# வீட்டில் திருடிய நகைகள் மீட்பு!

## இரண்டு சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 29

காந்தியூர், புலோலி தென்மேற்குப் பகுதியிலுள்ள வீட்டில் திருடப்பட்ட நகைகள், வெளிநாட்டு நாணயம் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டிலில் வைக்கப்பட்டிருந்த காப்பு, சங்கிலி, நெக்லஸ், கைச்சங்கிலி போன்ற நகைகளும் அவற்றோடு வெளிநாட்டு நாணயங்களும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திருடப்பட்டன என்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறைப் பொலிஸார், ஒரு மணித்தியாலத்தில் திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்தனர். அத்துடன் அவர்களிடமிருந்து நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயம் என்பவற்றையும் மீட்டனர். மேலும் திருட்டுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன் என்றும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14,26)

# வெடுக்குநாறி ஆலய உடைப்பு: சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துக

## தமிழ்த்தலைவர்களிடம் சைவ மகாசபை வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 29

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் இனந்தெரியாத விஷமிகளால் உடைத்தெறியப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆக்கிரமிப்பு - இனவெறிச் செயல்களுக்கு எதிராக சர்வதேசம் அழுத்தம் பிரயோகிக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல்கொடுக்கவேண்டும் என சைவ மகாசபை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சைவமகாசபை பொதுச்செயலாளர் மருத்துவர் பரா. நந்தகுமார் தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலே மிக நீண்ட காலமாக தமிழர்களின் இனப்பிரச்சினை புரையோடிப்போயுள்ளது. குறிப்பாகப் போருக்குப் பின்னர் தமிழர்களின் தொன்மங்களாக இருக்கும் வழிபாட்டுத் தலங்கள் மிக உக்கிரமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

கன்னியாய், வெடுக்குநாறி, கீரிமலை உள்ளிட்ட ஆலயங்களின் தொன்மங்களை அழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாக ஆதிசிவன் ஆலயத்தில் அனைத்துச் சிலைகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. அதேவேளை நீதிமன்ற உத்தரவையும் மதிக்காது குருந்தூரில் பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. கன்னியா வெந்நீரூற்றும் அநுராதபுர காலத்துக்குரியதொன்றென அச்சிடப்பட்டு தொல்லியற் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கடனில் சிக்கி சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கையில் இவ்வாறான சம்பவங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இதுவரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஒன்றிணைந்து இவற்றுக்கு காத்திரமான எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

திருநீறு பூசுவதையும் நடராஜர் சிலை வைப்பதையும் பற்றிப் பேசும் நாங்கள் இந்த விடயங்களில் கரிசனை கொள்வதில்லை.

இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் குறித்து சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தவேண்டும். தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுக்கவேண்டும்.

இதேவேளை வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய அழிப்புக்கு எதிராக நாளை (இன்று) நாம் போராட்டத்தை நடத்தவுள்ளோம். ஆக்கிரமிப்புக்களை நிறுத்த அழுத்தம் பிரயோகிக்குமாறு சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தவுள்ளோம் - என்றார். (ச)



# இராணுவமுகாம் அகற்றப்பட்டது

முல்லைத்தீவு, மார்ச் 29

ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதிக்கு அருகில் மணவாளன்பட்டமுறிப்புப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவமுகாம் முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டதில் இருந்து மணவாளன்பட்டமுறிப்புப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் படைமுகாம் அமைத்து கண்காணிப்புப் பணிகளை இராணுவத்தினர் முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் அங்குள்ள அரசமரத்தின் கீழ் புத்தர் சிலை மற்றும் பிள்ளையார் சிலை என்பனவற்றை வைத்து வழிபாடுகளையும் மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் கடந்த வாரத்தில் இருந்து இராணுவமுகாம் முற்றாக அகற்றப்பட்டுள்ளது. மேலும் அங்கு காணப்பட்ட புத்தர் சிலை, பிள்ளையார் சிலை என்பனவும் அகற்றப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (ஒ,14,19)

# கட்டுமரத்தில் சென்ற மீனவர் உயிரிழப்பு

மன்னார், மார்ச் 29

கட்டுமரத்தில் கரையோரமாக மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தலைமன்னார் பியரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. தலைமன்னார் பியரைச் சேர்ந்த முகம்மது நஃபில்கான் (வயது -36 ) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது சக மீனவ நண்பர் ஒருவருடன் இணைந்து தலைமன்னார் பியர் பாலத்தடியில் கட்டுமரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளார். அப்போது கடலுக்குள் விழுந்து மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த கடற்படையினர் கடலுக்குள் மூழ்கிய மீனவரை உடன் மீட்டெடுத்தனர். அதனையடுத்து மீனவரை தலைமன்னார் மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் மீனவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டது. மீனவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மன்னார் பொது மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இறப்பு விசாரணையை மன்னார் இறப்பு விசாரனை அதிகாரி எஸ்.ஈ.குமணகுமார் மேற்கொண்டார்.

உயிரிழந்த மீனவருக்கு நன்றாகத் நீந்தத் தெரியும் என்றும் அவருக்கு அடிக்கடி வலிப்பு ஏற்படுவதாகவும் அவரது மனைவி வாக்குமூலம் அளித்துள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு மீனவர் வலிப்புக்குள்ளாகி கடலில் மூழ்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-14,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கிறோம்



உதயன் ஆசிரியபீடத்தில்
பணியாற்றும்
**தங்கராஜசிங்கம் மயூரன்**
அவர்களின் பாசமிகு தாயாரான

**திருமதி தவரஞ்சினி தங்கராஜசிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும்
அன்னாரின்
குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும்
உதயனின்
அஞ்சலியும்
ஆறுதலும்
உரித்தாகட்டும்.

உதயன்
உதயன் குழுமத் தலைவரும்
பணியாளர்களும்

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள். நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும். சகோதர வழிச் சச்சரவு அகலும்.

**இடபம்:** வாழ்கைகத்தரம் உயர வழிவகை செய்துகொள்ளும் நாள். பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மிதுனம் :** ஆச்சரியப்படத்தக்க சம்பவங்கள் நடைபெறும் நாள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புகள் வந்து சேரலாம்.

**கடகம்:** வரவைக்காட்டிலும் செலவு அதிகரிக்கும் நாள். கோபத்தைக் குறைத் துக் கொள்வது நல்லது. நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர். எதிர்பாராத வரவால் நிதி நிலை உயரும்.

**சிம்மம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தினர்களின் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். கடந்த கால அனுபவங்களுடன் ஒரு முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

**கன்னி:** தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் தோள்கொடுத்து உதவுவர். பொருள் சேர்க்கை உண்டு. குடும்ப் முன்னேற்றம் கூடும். மனதில் குழப்பம் உண்டாகும்.

**துலாம்:** தெய்வ வழிபாட்டால்திருப்தி காண வேண்டிய நாள். வருமானம் வந்த மறுநிமிடமே செலவாகலாம். பணியாளர்களின் ஒத்துழைப்பு கொஞ்சம் குறையலாம்.

**விருச்சிகம் :** தொழில் முன்னேற்றம் ஏற்படும் நாள். நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தால் பணிகளை விரைந்து முடிக்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** வளர்ச்சி கூடும் நாள். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**மகரம்:** உடல் ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள். தெய்வ நம்பிக்கை கூடும். வரவேண்டிய கடன் பாக்கிகளை வசூலிப்பதில் அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.

**கும்பம்:** கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். [illegible]

# பிரவுண்ஸ் நிறுவனத்தின் சனகனுக்கு மாற்றத்தை ஏற்படுத்திய தலைவர் விருது



தனது புத்தாக்கத்துக்கும் புதுமை படைக்கும் சிந்தனைக்கும் புகழ்பெற்ற தலைவரான, பிரவுண் கம்பனி பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தாமோதரம்பிள்ளை சனகன், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற கௌரவமிக்க தலைமை நிர்வாக அதிகாரி விருது வழங்கலில், '2022 ஆம் ஆண்டில் மாற்றத்தை ஏற்படுத்திய தலைவர்' என்ற பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டார். தமக்குரிய தொழிற்றுறைகளில் உன்னதமான வெற்றியை எய்தியமை மட்டுமல்லாமல், தாம் வாழும் மற்றும் பணிபுரியும் சமூகங்களில் கணிசமான முன்னேற்றங்களைச் செய்து தாக்கத்தை ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க தனிநபர்களை இந்த விருது கௌரவிக்கின்றது.

சனகன், 2013 ஆம் ஆண்டு பிரதம நிதி அலுவலராக பிரவுண் கொம்பனி பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தில் இணைந்துகொண்டதுடன் பின்னர் 2020 ஆம் ஆண்டில் பிரதம தொழிற்படுத்தல் அலுவலராக இந்நிறுவனத்தின் தொழிற்பாடுகளை தலைமைதாங்கி நடத்தும் வகிபாகம் பொறுப்பளிக்கப்பட்டது. இவர் தற்போது பணிப்பாளராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றுவதுடன் கம்பனியை மாறுதலடையச் செய்வதில் முக்கியமான பங்காற்றியுள்ளார். நிதியியல் சேவைகள், வர்த்தகம், ஏற்றுமதி, உற்பத்தி, மருத்துவம், பண்ட மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்ற தொழிற்றுறைகளில் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளதுடன் பல சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளையும் வகித்துள்ளார். உள்நாட்டு மற்றும் பிராந்திய பன்முக விரிவாக்கங்களுடன் புதிய வருவாய் வழிகளை நோக்கி பிரவுண்ஸ் நிறுவனத்தை இயக்கிய அதே வேளை ஒட்டுமொத்த நிலையான வளர்ச்சியைப் பேணுவதில் இவர் செல்வாக்குச் செலுத்தியுள்ளார். சவால்மிக்க சகாப்தத்தில் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை சனகன் ஏற்றுக்கொண்டிருந்தாலும் நிறுவனம் அதன் வரலாற்றிலேயே அதிகூடிய இலாபத்தை எய்தியிருந்தது. இதன் மூலம் பிரவுண்ஸ் இலாபத்தின் அடிப்படையில், முதல் 100 நிறுவனங்களில் நான்காவது இடத்துக்கு தரப்படுத்தப்பட்டது.

டிஜிட்டல் மாற்றம், மாற்ற முகாமைத்துவம், புதிய வணிகங்களைத் தொடங்குதல், வியாபாரச் செயன்முறை மீள்பொறியியற்படுத்தல் மற்றும் கருத்திட்டம் அத்துடன்மூலோபாய வணிக முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் சனகன், பிரவுண்ஸ் நிறுவனத்தின் 148 ஆண்டுகால பாரம்பரியத்துக்கு அதிநவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தி அதன் நீண்டகாலம் நிலைத்திருக்கும் பாரம்பரியத்தினூடாக அதனை மேலும் பலப்படுத்தப்பட்ட, டிஜிட்டல்ரீதியாக அறிந்து கொள்ளும் நிறுவனமாக மாற்றம் பெறச் செய்துள்ளார். அவரது வழிகாட்டுதலின் கீழ், பிரவுண்ஸ் தென்கிழக்கு ஆசியாவிலேயே Microsoft Dynamics Business Central தொழில்நுட்பத்துடன் கூடிய முதலாவது கணினிக்கான இணைய வளங்கள் அடிப்படையிலான ERP system அமைப்பை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளது. தொழிற்றுறையிலுள்ள வேறு செயற்பாட்டாளர்களில் இருந்து நிறுவனத்தை தெளிவாக வேறுபடுத்துகின்ற பிரத்தியேகமாக உள்ளக ரீதியாக நிறைவேற்றப்படும் விற்பனைக் குழு தன்னியக்கப்படுத்தல், மீள் விநியோக முறைமை, உத்தரவாத முகாமைத்துவ முறைமை, கையிருப்பு கணக்கெடுப்பு முறைமை, மற்றும் இணையத்தில் விடயங்கள் என்பனவற்றை ஏனைய அபிவிருத்தித் தீர்வுகள் உள்ளடக்குகின்றன. மேலும், அடிப்படைத் தரவுகள் மற்றும் பகுப்பாய்வுகளுக்கான பிரவுண்ஸ் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் ஆகியன ஏனைய முக்கியமான முன்முயற்சிகளில் சிலவாகும்.

இந்த விருது குறித்து சனகன் கருத்துத் தெரிவிக்கையில், 'இவ்வங்கீகாரத்தையொட்டி நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் படைப்பாற்றல், விரிவாக்கம் மற்றும் பரீட்சார்த்தங்களுக்கான புதிய, அற்புதமான வாய்ப்புகளை ஆராய்வதற்கும், சுயமாக அதனை நிலைநிறுத்திக் கொள்வதற்குமான பிரவுண்ஸ் நிறுவனத்துக்கு மற்றொரு தளமாக இது செயற்படும் என நம்புகின்றேன். எனது தொலைநோக்கு வெறுமனே வணிகத்துக்கானது மாத்திரமல்ல, அதனுடன் இணைந்த பணியாளர்களுக்கானதும் கூட. எல்லாவற்றிலும் வாய்ப்பைப் காணும் விதத்திலும், தோல்வியில் இருந்து கற்றுக் கொள்ளவும், அவர்களின் எல்லைகளுக்கு அப்பால் தாமாக சவால்விடவும் அவர்களை ஊக்குவிப்பதன் மூலம், இறுதியில் நிறுவனத்தை அபிவிருத்திப் பாதையில் மாறுதலடையச்செய்கின்றவர்களாக நாம் அவர்களை மாறுதலடையச்செய்கின்றோம். இதன் பயனாக மாற்றத்தை ஏற்படுத்தும் தலைவர்களின் புதியதோர் தலைமுறையை நாம் உருவாக்குகின்றோம்' எனக்குறிப்பிட்டார்.

சனகன் தற்போது அசோசியேட்டட் பெட்டரி மெனுபெக்சரர்ஸ் (சிலோன்) லிமிடெட், பி.ஐ. ஹோல்டிங்ஸ் மற்றும் வேறு பல குழும நிறுவனங்களின் பணிப்பாளராகச் செயற்படுகிறார். இவர் இதற்கு மேலதிகமாக 'கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி', எல்.ஓ.எல்.சி. டெவலப்மென்ட் பினான்ஸ் பி.எல்.சி ஆகியவற்றின் சபைகளிலும் பணியாற்றியுள்ளதுடன் மற்றும் எல்.ஓ.எல்.சி. டெவலப்மென்ட் பினான்ஸ் பி.எல்.சி.யின் கணக்காய்வுக் குழுத் தலைவராகவும் இருந்தார். இவர் இங்கிலாந்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் மற்றும் அமெரிக்காவின் உலகளாவிய பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினரும் யாழ்ப்பாணம் புனித சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தவரஞ்சினி - தங்கராஜசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**



**மலர்வு**
**1957.05.17**

**உதிர்வு**
**2023.03.28**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவரஞ்சினி-தங்கராஜசிங்கம் நேற்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை - லக்சுமி தம்பதியரின் செல்வப்புதல்வியும் கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் க.தங்கராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் தாரணி, மயூரன், திலீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தே.சதீஸ்குமாரின் அன்பு மாமியும் கரிகாலன், அருச்சுனன், ருத்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2023) புதன்கிழமை 976, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**074 20 01 214**
**076 12 21 566**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதிர்ப்பு வலுக்கட்டும்!

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை இலங்கையெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, துறைசார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோர் விரைந்து துலங்கலாற்றும் அளவுக்கு இந்த எதிர்ப்புகள் அமைந்திருக்கின்றன. ஆனால், இத்துடன் கதை முடிந்து விட்டதா? வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய உடைப்புக்கு தமிழர் தாயகம் 'தொலைதூரச் சிந்தனையின் அடிப்படையில்' வினையாற்றியிருக்கின்றதா? என்று கேட்டால், அதற்குரிய ஒற்றைப்பதில் 'இல்லை' என்பதுதான்.

உண்மையில் மதங்களை, இனங்களைக் கடந்த ஒரே சிந்தனையின் பாற்பட்ட எதிர்ப்புத்தான் இதற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால், எமது மதத்தலைவர்கள் அதற்கு ஏற்றவகையில் துலங்கலாற்றவில்லை என்பது நிதர்சனம். 'பௌத்த பேரினவாதம்' என்பது ஒரு பொது எதிரி. அதன் இரை, தமிழர்கள் என்றோ, முஸ்லிம்கள் என்றோ, இந்துக்கள் என்றோ, கிறிஸ்தவர்கள் என்றோ ஒருபோதும் கொள்ளமுடியாது. பௌத்த பேரினவாதச் சிந்தாந்தத்துக்கு அப்பாற்பட்ட எல்லாமே அதற்கு இரைதான், இதுதான் 'சுதந்திர' இலங்கையின் வரலாறு. வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்ட சமநேரத்தில், கச்சதீவு அந்தோனியார் ஆலயமும் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கின்றமை இதற்கு ஆகச் சிறந்த சான்று.

'ஒற்றுமைக்குத் தேவை பொதுஎதிரி' என்பார்கள். இந்தச் சிந்தனையைத்தான் தமிழர் தாயகத்திலுள்ள இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத்தலைவர்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வர ஆலய அழிப்பு என்பது வெறுமனே இந்துக்களுடன் தொடர்புடைய அல்லது அவர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட விடயம் அல்ல. கச்சதீவு அந்தோனியாருக்குச் சவாலாக அங்கு விகாரையை அமைக்க மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்கள் வெறுமனே கத்தோலிக்கர்களுடன் தொடர்புடைய விடயமல்ல. வெடுக்குநாறிமலை அடாவடிக்கு நீதிகேட்க கத்தோலிக்கர்களும், கச்சதீவு விடயத்துக்கு நீதிகேட்க இந்துக்களும் முன்வரவேண்டும். எமக்குள் ஏற்படுத்தப்படும் 'நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒற்றுமைதான்' இந்த நாட்டில் பௌத்த பேரினவாதத்தைத் தாண்டிய மதங்களினதும் சமூகங்களினதும் இருப்பை தக்க வைக்கும்.


இதைவிட, உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு நீதிகோரி, ஐக்கிய நாடுகள் சபை வரைக்கும் சென்று ஆகப்பெரிய எதிர்ப்பை வெளிப்படுத்திய – வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த விடயங்களில் மௌனித்திருப்பது வேடிக்கையிலும் வேடிக்கை. அவர் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு நீதிகோரியமையில் இம்மியும் தவறில்லை. ஆனால், தன் இனக்குழுமம் சார்ந்த மதத்தவர்களின் நலனில் (சிங்களக் கத்தோலிக்கர்கள்) அவர் காட்டும் அக்கறையில் பாதியையாவது ஏனைய இனங்கள் வஞ்சிக்காதிருப்பதில் காட்டலாமே! கர்தினாலின் கருத்துக்கள் வலியவை. ஆபிரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட எத்தனையோ படுகொலைகளுக்கு எதிராக, அந்தந்த நாடுகளில் கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால்களாக இருந்தவர்கள் சாட்சியமாகியிருக்கின்றார்கள். ஆனால், முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாகத் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டபோது, எந்த எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல் மௌனித்திருந்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் பின்னரும் அதே நகர்வைக் கைக்கொள்கின்றமையானது அவர் 'தனிச் சிங்களக் கத்தோலிக்கர்களுக்கான' கர்தினாலா? என்ற கேள்வியைத்தான் எழுப்புகின்றது.

வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிராக நல்லூரில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கத்தோலிக்க மதகுருக்கள் பங்கேற்றமையையும், இந்த இழிசெயலுக்கு எதிராக யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு கண்டனம் தெரிவித்ததையும் வரவேற்கத்தக்கதே. ஆனால், இந்த எதிர்ப்புக்கள் இன்னும் நிறுவனமயப்படுத்தப்படவில்லை என்பதுதான் இங்கே விடயம். தமக்கிடையேயான மதவேற்றுமைகளைக் களைந்து, சிறுபான்மையினர் தமக்கோ அல்லது ஏனைய சிறுபான்மை இனங்களுக்கோ அநீதி நிகழும் இடத்து கரங்களை ஒன்று சேர்த்து எதிர்ப்பை வெளிப்படுத்துவதன் ஊடாக மட்டுமே இந்த அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

நாளொரு நல்வார்த்தை

"அன்பு ஒன்று மட்டுமே அனைத்துப் பருவங்களிலும் கிடைக்கக் கூடிய பழம், அனைவருக்கும் கிடைக்கக்கூடியதும் கூட"

– அன்னை தெரேசா



# ஆளணிப் பற்றாக்குறை; தள்ளாடும் சுகாதாரத்துறை

**கொழும்பு, மார்ச் 29**

**ஆளணிப் பற்றாக்குறையால் சுகாதாரத்துறையை முன்கொண்டு நடத்துவதில் பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது. இதனால் மருத்துவத்துறை செயலிழக்கும் சூழல் காணப்படுகிறது என மருத்துவ வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**

60 வயதை எட்டிய மருத்துவ நிபுணர்கள் ஓய்வு பெற்றமையாலும் சம்பளமற்ற விடுப்பில் சிலர் வெளியேறியுள்ளமையாலும் மருத்துவத்துறை தள்ளாட்டம் அடைந்துள்ளது.

இதேவேளை நிர்வாக மட்டத்திலும் பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

உயர் நிர்வாக மட்டத்தில் 175 க்கு மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்ற அதேவேளை விசேட மருத்துவ நிபுணர்களுக்கான 288 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

வெற்றிடங்கள் தொடர்பான தலைமையகத்தின் தீர்மானங்களில் தெளிவின்மை, தொடல்பாடல் குறைபாடுகள். போன்ற காரணங்களால் சுகாதாரத்துறையை ஒழுங்காக கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, சுகாதாரத்துறையின் ஆளணிப் பற்றாக்குறை உடன் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் மருத்துவத் துறை செயலிழக்கும் அபாயம் ஏற்படும் என மருத்துவ வட்டாரங்கள் மேலும் சுட்டிக் காட்டின. (ச-6)

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனாவுக்கு இராணுவத் தேவையில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

பெரும் இழப்பை - நஷ்டத்தை எதிர்கொண்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன வர்த்தகர்களிடம் கையளித்துள்ளோம். ஆயினும் சீனாவின் இராணுவத் தேவைகளுக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் ஒருபோதும் பயன்படுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹவார்ட் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த 'சூம்' உரையாடலில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறுப்பேற்றுள்ள சீனாவுடனான ஈடுபாடுகள் குறித்து அமெரிக்காவுடன் தொடர்ச்சியாக பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றோம். அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்வகிக்க முடியாதுள்ளதால் நாங்கள் துறைமுகத்தை சீன வர்த்தகர்களிடம் ஒப்படைத்துள்ளோம். அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பை இலங்கையே கையாள்கின்றது. துறைமுகம் சீனாவுக்குச் சொந்தமானதல்ல. அந்தத் துறைமுகம் இராணுவரீதியில் பெறுமதியற்றது. சீனா அதனை இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்தப்போவதில்லை என உறுதியளித்துள்ளது. இங்கு பொருள்களை இறக்கி ஏற்றமுடியும். ஏனைய துறைமுகங்களுக்கு எடுத்துச்செல்லமுடியும். இந்து சமுத்திரத்தில் சீனாவின் போர்க் கப்பல்கள் தரித்து நிற்கையில் எதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்தை அவர்கள் பயன்படுத்தப் போகிறார்கள்? இதுகுறித்து அமெரிக்கா அச்சம் கொள்ளத் தேவையில்லை - என்றார். (ச-6)

நாளை

30.03.2023
வியாழக்கிழமை
பங்குனி 16

சுபநேரம் : 07.43 - 09.13
ராகுகாலம் : 01.43 - 03.13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை மேடையேறுகிறது குருதி கழுவிய குவலயம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப் பட்டு வருகின்ற திருப்பாடுகளின் நாடகம் இந்த ஆண்டு 'குருதி கழுவிய குவலயம்' என்ற தொனிப்பொருளில் நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான நான்கு நாள்களும் யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மாலை 6.45 மணிக்கு மேடையேற்றப்பட வுள்ளது.

திருப்பாடுகளின் நாடகமரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனை களை உள்வாங்கி புதிய பார்வை களுடன் இந்த ஆற்றுகையை மேடையேற்றி வந்துள்ளது. இந்தமுறை மேடையேற்றப்படும் 'குருதி கழுவிய குவலயம்' முதன் முதலாக 1999ஆம் ஆண்டிலும், அதன் பின்னர் 2005ஆம் ஆண் டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது 18 ஆண்டுகளின் பின் னர் மீண்டும் மேடையேற்றப்ப டவுள்ளது. 'குருதி கழுவிய குவ லயம்' நாடகப் பிரதியை திரு மறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ் குமார் எழுதியுள்ளதுடன் அவ ரின் நெறியாள்கையில் மேடை யேற்றப்படவுள்ளது. (ஒ-14)

# விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கிளிநொச்சி, மார்ச் 29

பளை, இந்திராபுரம் சந்தியில் நேற்றுமாலை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். இத்தாவிலைச் சேர்ந்த நிருசன் (வயது-27) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நடந்துசென்ற மேற்படி நபரை வேகமாக வந்த பட்டா ரக வாகனம் மோதியதால் இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தை ஏற்படுத்திய சாரதி பளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள் ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (ம-9)

# தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்புப் பகுதியில் தூக்கிலிருந்து இளை ஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட் டுள்ளது. அவர் தவறான முடி வெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். தூக்கில் சடல மொன்று இருப்பதாகப் பொலி ஸாருக்குத் தகவல் வழங்கப்பட் டதையடுத்து, சம்பவ இடத் துக்கு வந்த பொலிஸார் சட லத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். (ம)

## அகவை 60 இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியரான

**திருமதி மீனாம்பிகை பரமேஸ்வரன்** அவர்கள்

இன்று (29.03.2023) புதன்கிழமை

**தனது அறுபதாவது அகவை தினத்தைக் கொண்டாடுகிறார்.**

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் உயர்ந்த சாதனைகளுக்கும் அர்ப்பணிப்புடன் நீண்ட காலம் எம்மோடு இணைந்து பணியாற்றிய இவரைப் பாராட்டி நன்றி தெரிவிப்பதோடு சீரும், சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**

**அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள்,**
**கல்விசாரா ஊழியர்கள்,**
**யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,**
**யாழ்ப்பாணம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/நீர்வேலி சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலை**



தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை-2022 இல் சித்தியடைந்த எமது பாடசாலை மாணவி

**செல்வி ஜானுஷா வசீகரன்**
**(150 புள்ளிகள்)**

மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

**உ.ஜெகதீவ் (108 புள்ளிகள்)**
**ஜெ.ஜென்சன் (90 புள்ளிகள்)**

ஆகிய மாணவர்களை கல்வியில் மேலும் சிறந்து விளங்க வாழ்த்துவதுடன் இம் மாணவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்**
**யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை**

(CS 22563) 1-6

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

**உசன் காட்டுவளவுக் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான ஆதனத்தை 30 வருடகால குத்தகை வழங்குவது தொடர்பான அறிவித்தல்**

Trust ordinance இன் பிரிவு 38(1) இன் கீழான
விண்ணப்பம்
குகதாசன் விமலதாஸ் (முகாமையாளர்
உசன் காட்டுவளவு. கந்தசாமி கோவில்) உசன்.
மிருசுவில்.

- மனுதாரர்

வழ. இல: நானாவிதம் / 246/2023

எதிர்

1. குகதாசன் கமலதாசன்
2. விமலதாஸ் சிறிகண்ணன்
3. விமலதாஸ் யதுகுலன்
4. சுவாமிநாதன் சற்குணநாதன்
   உறுப்பினர்கள்
   உசன் காட்டுவளவு கந்தசாமி கோவில்
   நிர்வாகசபை

- எதிர்மனுதார்கள்

உசன் காட்டுவளவு கந்தசாமி கோவிலுக்கு சொந்தமானதும் விடத்தற்பளையில் அமைந்திருப்பதுமான "விக்றோறியா டிறமோர்" என்னும் ஏக்கர் 175 ரூட் 01 பேட்ஸ் 32 விஸ்தீரணம் கொண்ட காணியினை Rajeswary Agro & Diary (PVT) Ltd இற்கு வழங்குவதற்கு குறித்த கோவில் நிர்வாக சபை உறுப்பினர் அனைவரும் ஏகமனதாக முடிவுசெய்து அதற்கு அனுமதி கோரி நாணாவிதம் /246/2023 என்ற வழக்கினை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனராகையால் இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதியோ அதற்கு முன்னரோ சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் தோன்றி மேற்குறித்த வழக்கில் அதனை தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறீர்கள்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
சாவகச்சேரி

(CS/23999)4,6

## 60ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



**இன்று 29.03.2023**

புதன்கிழமை மணிவிழா காணும் எமது நிறுவன உரிமையாளரும் தாயகம் அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகருமான

**கலாநிதி திரு. S.V. சிறிதரன்**

அவர்களைப் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ இறைவனை மனதார வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்**

**பணியாளர்கள்,**
**கொனிக்கா கலர் லாப் நிறுவனம்**
**சிறிராம் ஜுவல்லர்ஸ் நிறுவனம்**
**யாழ்ப்பாணம்.**

(CS 39546) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 09 - 1932



மறைவு 28 - 03 - 2023

## கந்தையா தில்லைநாதன்

கந்தையா வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தில்லைநாதன் அவர்கள் நேற்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா உருக்குமணி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சின்னம்மாவின் பாசமிகு கணவரும், வேற்கீரன் (ஶ்ரீகரன் புக் சென்ரர்), நாககீதன்(ஶ்ரீகரன் புக் சென்ரர்), நாகதர்சினி (கனடா), கேசவன் (இத்தாலி), ஜனந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சுபாஜினி (ஆசிரியர்-காரைநகர் இந்துக் கல்லூரி), பாலகிருஸ்ணன்(கனடா), நிருஜன்(மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், அஷ்வினி, அஷ்விகன், அபிலாஷ்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேஷ்வரி, பரமேஸ்வரி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேலுப்பிள்ளை, சின்னத்துரை, இளையதம்பி, திருஞானசுந்தரம், சோமசுந்தரம், தவமலர், சிவபாதசுந்தரம், விமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 078 1660(மகன்)**

# 5ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 . 05 . 1956



சிவன் அடியில் 29 . 03 . 2018

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும்,
சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த,

மாமனிதர் [குணாளன் மாஸ்ரர்]


## சற்குணசிங்கம் ஞானகுணாளன்

நீங்காத நினைவுகள் தந்து
நீண்ட தூரம் சென்று
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
ஓயவில்லை உன் நினைவுகள்.
பார்த்த விழிகள் தேடுகின்றன.
ஆறாது உன் நினைவுகள்.
அழியாது உன் புன்னகை

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நித்தம் உன் நினைவுகளோடு
அம்மா, மனைவி, பிள்ளைகள்
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



## கனகர் வீரசிங்கம்

மலர்வு 29.07.1943

உதிர்வு 27.03.2023

சுன்னாகம், ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது சுவிட்சர்லாந்தை (Zurich) வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் வீரசிங்கம் நேற்றுமுன்தினம் (27.03.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகர் - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னர் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், கீதாஜினி, கலாஜினி (ஹொலண்ட்), துர்காஜினி (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரேஸ்வரன் (ஜெயகிருஷ்ணா), ஜெப் (ஹொலண்ட்) ஆகியோரின் மாமனாரும், நிதீசன் (சுவிட்சர்லாந்து), பானுஜா (கொழும்பு SLIIT பல்கலைக்கழகம்), சுகேசன் ( சென்.ஜோன்ஸ் கல்லூரி - A/L - 2024), விவீசன் (சுவிட்சர்லாந்து), சார் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு பேரனும், தியாகராசா, காலஞ்சென்ற இராசையா, நாகராசா மற்றும் சின்னத்துரை, நன்னித்தம்பி, தவமணி, இராசமணி, நடராசா ஆகியோரின் சகோதரனும், தம்பிராஜா, சிவராஜா, சரோஜா (பிரான்ஸ்), யோகர்ாணி, நாகராஜா (ஹொலண்ட்), யோகராசா (ஹொலண்ட்), வசந்தராணி (பிரான்ஸ்), பாமுராசா (ஹொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (30.03.2023) வியாழக்கிழமை இலங்கை நேரப்படி நண்பகல் 12.00 மணிக்கு சுவிட்சர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] ஐயனார் கோயில் வீதி,
சுன்னாகம்.

தகவல்:-
குடும்பத்தினர்.
சுந்தரேஸ்வரன் (மருமகன்),
சு. கீதாஜினி (மகள்)

(CS/22558)4,6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் இல்லம் அடித்துடைப்பு 12 சிறுவர்களுக்கு புனர்வாழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்ல விடுதியின் அலுவலகத்தை உடைத்துச் சேதமாக்கிய குற்றத்துக்காக அந்தச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 12 சிறுவர்கள் மறுவாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.


யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்ல விடுதியின் முகாமையாளர் விடுதிக்குள் வருவதற்கு சிறுவர் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிறுவர் இல்ல வழக்கொன்றில் அவர் தொடர்புபட்டுள்ளதால், அவர் சிறுவர் நீதிமன்றத்துக்குள் செல்வது சாட்சியங்களைக் கலைக்கக் காரணமாக அமைந்துவிடும் என்று சுட்டிக் காட்டப்பட்டதற்கு அமையவே அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே முகாமையாளருக்கு விதிக்கப்பட்ட தடையைக் கண்டித்து சிறுவர் இல்ல அலுவலகம் சிறுவர்கள் பலரால் அடித்துடைக்கப்பட்டது. இந்த நிலையில் மேற்படி சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்கள் அனைவரும் நேற்று சிறுவர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே மேற்படி அடாவடியில் ஈடுபட்ட 12 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் சிறுவர் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பப்பட்டனர். ஏனையவர்கள் சிறுவர் இல்லத்துக்கு திருப்பியனுப்பப்பட்டனர். (ம)

### 'இலங்கை...

விடுதலையாகப் போவதை கடவுள் எனக்கு வாக்குறுதி தந்துள்ளார் - இவ்வாறு ஜனாதிபதி ரணிலைச் சந்தித்த போது போதகர் போல் தினகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மத வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வருகைதந்த போல் தினகரன், எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக திட்டமிட்டபடி தனது மதக்கூட்டங்களை நடத்தாமலேயே கொழும்பு வழியாக திரும்பிச் சென்றிருந்தார். எனினும், அவர் இந்தியாவுக்குச் செல்ல முன்னர் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார். இதன்போதே அவர் ஜனாதிபதியிடம் இவ்வாறு தனக்கு இலங்கையின் மீட்சி பற்றி கடவுள் வாக்குறுதி தந்த கதையை தெரிவித்துள்ளார். அத்துடன் ஜனாதிபதி ரணிலுக்கு நினைவுச் சின்னமொன்றையும் அவர் வழங்கியுள்ளார். (அ-ம-6)


அசைக்க முடியாத நம்பிக்கையுடன்...



யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்துள்ள கீரிமலை கேணி பாறைச் சுவரினால் கடலில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த கேணி சுத்தமான புனித நீர் நிறைந்தது. ஆச்சரியப்படும் வகையில், கடலின் எல்லையில் உள்ள உப்பு கலக்காத கீரிமலை கேணியில் உள்ள இந்த புனித நீரில் நீராடுவதன் மூலம் நோய்கள் தீரும், உடல் உபாதைகள் அகலும் என்பதன் மீது மக்களுக்குத் தீராத நம்பிக்கை உள்ளது. யாழ்ப்பாண மக்களின் அனைத்து பொருளாதார பிரச்சினைகளுக்கும் வெற்றிகரமான நிதி தீர்வுகளை வழங்கி, ஆறுதலான மன நிம்மதியைக் கொண்டுவருவதற்காக

இலங்கையின் நிதித்துறையில் வலுவான நிலையான, நம்பகமான நிதி நிறுவனமான நாங்கள் யாழ் குடாநாட்டிற்கு வருகின்றோம்.

சிங்கர் ஃபினான்ஸ்

வெற்றிகரமான 50 வது கிளை

எமது 50 வது கிளை திறப்பு விழா வெகு விரைவில் யாழ்ப்பாணம் 462 A, வைத்தியசாலை வீதியில் பெருமைக்குரிய கிளையாக திறந்து வைக்கப்படுகிறது. நாம் உங்களின் அசைக்க முடியாத விசுவாசமாக எப்போதும் இருப்போம்.

011 2 400 400

The World Of Hayleys

SINGER FINANCE

ஹேலிஸ் குழுமத்தின் உறுப்பு நிறுவனம்

E-mail: financecompany@singersl.com | Web: www.singerfinance.com | Facebook: SingerFinancePLC





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில், யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி எழுதிய 'அரண்' சிறுகதைத் தொகுப்பு மற்றும் 'தரிசு' நாடகத் தொகுப்பு ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

மேற்படி கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் கோப்பாயில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இந்த நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. (ய-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்குப் போதை 10 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 29

பாடசாலை மாணவர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் இலக்குவைத்து போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 10 இளைஞர்கள் யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொ.மேனன் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கையிலேயே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் 17 தொடக்கம் 22 வயதுடையவர்கள். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, அவர்களுக்கு ஹெரோய்ன் போதைப் பொருளை விநியோகிக்கும் பெண்ணொருவரும் ஒரு கிராம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ம-26)

**The Royal College Of Jaffna**

**தனியார் கல்வி நிலையம், சங்கானை**
**(பழைய மீன் சந்தை அருகில்)**

வர்த்தகம் / கணக்கீடு - R. கிருத்திகா
சிங்களம் / Spoken - S. பிறேமன்
ஆங்கிலம் / Spoken - N.விக்னேஸ்வரன்
ஆச்சாரியார்.

**077 675 1649**

## முதலாம் ஆண்டு நினைவு தின ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம் 22.06.1950
மறைவு 09.04.2022

கடந்த 09.04.2022 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் இலங்கைநாதன் பவளகாந்தன்

திதி : பங்குனி மாத வளர்பிறை அட்டமி

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.03.2023) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

"சிவபவனம்"
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

(CS 22555) (3/6)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 23.11.1962
விண்ணுலகில் 21.03.2021

### திருமதி பிரபாலினி வரதராஜன் (பிரபா)

(ஆசிரியர், யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
உடலால் மறைந்து போனாலும்
உள்ளத்தில் மறைந்து போகாத
உயரிய அன்னை
திருமதி பிரபாலினி வரதராஜன் எனும் மணி விளக்கே
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து காட்டிய அறிவுக்கடலே
மணிவிழாக் காணும் வேளையில்
ஆண்டவன் உங்களை அழைத்ததென்ன
ஈராண்டு உருண்டோடி விட்டதம்மா
ஆனாலும் உங்கள் நினைவலைகள்
எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை
உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றென்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 138/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
உறவினர்கள்,
சகோதரர்கள்.

(CS 22555) (3/6)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் திருமதி அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி



திதி:- பூர்வபக்க அட்டமி
(29.03.2023)

ஆண்டுகள் பத்து ஆனாலும் ஓயுமோ உம் நினைவு
எம் ஊரோடும் உணர்வோடும் ஒன்றாய்க் கலந்த
உத்தமியே
வேரூடே நீர் சுமந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே
விரும்பி ஈந்தீர்
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த அம்மாவே
சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
நெருடுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங் கண்களுடன் நிதமும்மைப் போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ நிம்மதியைத் தாராயோ...

என்றும் உங்கள்
நினைவுகளுடன்.....

அன்னை மடியில் 14.11.1952
இறைவன் அடியில் 19.03.2013

இல.14, கோவிலாக்கண்டி,
நாவற்குழி கிழக்கு,
கைதடி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(cr/39545)4,6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிராமஅலுவலர்கள் ஊடாக கொடுப்பனவு வழங்க முடியாதா?


## பதில் ஆள் நியமித்து கொடுப்பனவை பெறுமாறு சமூர்த்திவங்கி தெரிவிப்பு

**சாவகச்சேரி, மார்ச் 29**

**சமூர்த்திவங்கிகளில் வழங்கப்படும் முதியோர், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக பாதிப்பு ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளை அந்தந்த கிராமஅலுவலர்கள் ஊடாக வழங்க முடியாதா? என்று கொடுப்பனவு பெறுவோர் கேள்வியெழுப்பியுள்ளனர்.**

பிரதேசசெயலக சமூகசேவைகள் அலகால் அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் தற்போது சமூர்த்தி வங்கிகளில் வழங்கப்படுகின்றன. கொடுப்பனவு பெறச்செல்லும் அனைவரும் வாகனக் கூலியாக பெருமளவு பணம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் எழுதுமட்டுவாழ்ல் வசிப்போர் 5 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கொடிகாமம் சமூர்த்தி வங்கியிலும், கேரதீவுப் பகுதியில் வசிப்போர் 7 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கைதடி சமூர்த்தி வங்கியிலும், மீசாலை கிழக்கில் உள்ளோர் 6 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள வரணி சமூர்த்தி வங்கியிலும் கொடுப்பனவுகளைப் பெறவேண்டும். தற்போதைய நெருக்கடியில் கொடுப்பனவு பெறுவதற்கு வாகனங்களில் பயணிக்கும்போது கொடுப்பனவின் அரைவாசிப் பணம் வாகனங்களுக்குச் செலவாகின்றது என கவலை தெரிவித்துள்ளனர். இந்த நிலையிலே தமக்கு மாற்று ஒழுங்கு ஏற்படுத்தி கொடுப்பனவை வழங்குமாறும் அல்லது கிராமஅலுவலர்கள் ஊடாக கொடுப்பனவை வழங்க முடியாதா? எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக சமூர்த்தி வங்கிகளைத் தொடர்புகொண்டபோது, கொடுப்பனவு பெறுவதற்கு பயனாளிகளால் பதில் ஆள் நியமித்து அவர் ஊடாக கொடுப்பனவு பெறுவதற்குரிய படிவம் பிரதேச சமூர்த்தி தலைமை அலுவலகத்தில் உள்ளது. எனவே வங்கிக்கு வர இயலாதவர்கள் சமூர்த்தித் தலைமை அலுவலகத்தில் உரிய படிவத்தைப் பெற்று பதில் ஆள் நியமித்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)



## மரக்கறிகளின் விலை வீழ்ச்சி; பயிர்ச்செய்கையாளர் பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 29

சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் தற்போது வீழ்ச்சியடைந்து போதிய சந்தைவாய்ப்பின்மையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மரக்கறிச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

மரக்கறிப் பயிர்ச்செய்கை மேற்கொண்டு 3 மாதங்களின் பின்னரே அதன் பயனைப் பெற முடியும். அயராத உழைப்பின் பயனாக அறுவடை செய்கின்ற காய்கறிகளை சந்தைக்குக் கொண்டு சென்றால் கிலோ 100 ரூபா அல்லது 80 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுகிறது. இடைத்தரகர்கள் எம்மிடம் கொள்வனவு செய்யும் மரக்கறிகளை 200 ரூபாவுக்கு அதிக இலாபத்தில் விற்பனை செய்கின்றனர். காய்கறி உற்பத்தியாளர்களுக்கு எந்தப் பயனும் கிடைப்பதில்லை.

அத்துடன் புதிய இன மிளகாய்ச் செடிகளில் தற்போது பங்கஸ் நோய்த் தாக்கமும் அழுகல் நோயும் ஏற்படுகிறது.

இந்தநிலையில் மின்கட்டணம் 3 மடங்காக அதிகரித்துள்ள நிலையில் மேலும் நட்டத்தையே எதிர்கொள்ள நேரிடுகிறது.

எனவே பயிர்ச்செய்கையாளர்கள் எதிர்நோக்கும் இன்னல்களை கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-113)

## கச்சதீவின் பாரம்பரியம் பேணப்பட வழிவகுக்குக

### *யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 29

கத்தோலிக்கர்களால் கொண்டாடப்படும் கச்சதீவின் தனித்துவத்தை சீர்குலைக்கும் வகையில் மர்மமாக முளைத்துள்ள புத்தர் சிலை சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. கச்சதீவின் பாரம்பரியம் - தனித்துவத்தைப் பேண ஆவன செய்யவேண்டும் - இவ்வாறு யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் ப.யோ. ஜெபரட்ணம், யாழ்.மாவட்டச் செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

இலங்கை - இந்திய பக்தர்கள் சமத்துவமாக வருடம்தோறும் ஒன்று கூடி அந்தோனியாரை வழிபட்டு செல்லும் ஒரு புனித பூமியாக கச்சதீவு காணப்படுகிறது.

இங்கு இரகசியமாக புத்தர் சிலை வைக்கப்பட்டு பௌத்தமயமாக்கல் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது. இந்தச் செயற்பாடு இந்திய - இலங்கை உறவில் விரிசலை ஏற்படுத்துவதுடன் இரு நாட்டு நட்புக்கும் பங்கம் ஏற்படவும் வழிவகுக்கும் என்பதையிட்டு கவலையடைகின்றோம்.

ஆகவே கச்சதீவில் புனித அந்தோனியார் திருத்தலத்தை தவிர வேறெந்த மத அடையாளங்களோ, கட்டமைப்புக்களோ அமையக்கூடாது. எனவே கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட தாங்கள் ஆவன செய்யவேண்டும் - என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி யாழ்ப்பாண ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், நெடுந்தீவு பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ச)

## கல்விசார் சுயதொழிலுடன் பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோரின் பொறுப்பே

### *மன்னார் பிரதேசசெயலர் தெரிவிப்பு*

மன்னார், மார்ச் 29

எதிர்காலத்தில் கல்வியுடன் இணைந்தவாறான சுய தொழில்களை செய்யும் வகையில் பிள்ளைகளை உருவாக்க வேண்டியது பெற்றோர் ஒவ்வொருவரினதும் பெரிய பொறுப்பாகும். இவ்வாறு மன்னார் மாவட்ட பிரதேசசெயலர் எம்.பிரதீப் தெரிவித்தார்.



பேசாலை சென். மேரிஸ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஒரு மாணவன் கல்வியில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைய நினைக்கின்றானோ அதற்கு இணையாக ஆற்றலை விருத்தி செய்வதற்கு விளையாட்டுக்களும் முக்கியமானவை.

ஒவ்வொரு மாணவனும் அவன் கற்கின்ற விடயங்களுக்கு மேலாக அவனுடைய ஆளுமை விருத்தி அடைவதற்கு விளையாட்டு மைதானமானது பல்வேறு விடயங்களை கற்றுக் கொடுக்கின்றது.

சமூகத்திலே பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது ஒவ்வொரு விளையாட்டுக்களும் அவனுக்கான பாடத்தைக் கற்றுக் கொடுக்கின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது.

இன்றைய பொருளாதார நெருக்கடி ஒவ்வொருவரையும் கடின உழைப்புக்கு ஆளாக்கும் தன்மையை உருவாக்கியுள்ளது. ஒவ்வொருவரும் கடினமாக உழைத்தால் மட்டுமே இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை சிறிதேனும் நிவர்த்தி செய்யமுடியும். அதற்கு ஒவ்வொருவரும் தாமாக சுய தொழில் செய்யவேண்டும். இன்னும் பத்து வருடங்கள் கடந்த பின்னர் பிள்ளைகள் அனைவரும் வருமானம் தேடும் மனிதர்களாக மாறிவிடுவர். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான நெருக்கடிகளுக்குள் சிக்காமல் இருப்பதற்கு ஒவ்வொரு பிள்ளைகளையும் கல்வியோடு சுயதொழில் மேதைகளாகவும் உருவாக்குவதற்கு பெற்றோராகிய எமக்கு பெரும் பொறுப்பு இருக்கின்றது - என்றார். (ஒ-14,60)



## யாழ்.தொழில்நுட்ப கல்லூரி வைரவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் வைரவிழா நிகழ்வுகள், கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுந்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வைரவிழா மலரை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். சிறீசற்குணராஜா வெளியிட்டு வைத்தார். மேலும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டச்செயலர் சிவபாலசுந்தரன் கலந்துகொண்டதுடன் தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14)

## வன்முறையற்ற சமூகம் விழிப்புணர்வு நிகழ்வு

வன்முறையற்ற மகிழ்ச்சியான குடும்பங்களைக் கட்டியெழுப்பும் முகமாக விழிப்புணர்வு நிகழ்வு பெண் தலைவர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பொன்னகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு 21 இளம் குடும்பங்கள் அழைக்கப்பட்டு வன்முறையற்ற மகிழ்வான குடும்ப வாழ்வை முன்னெடுப்பது தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அத்துடன் ஆரோக்கியமான வாழ்வுக்கு இடையூறாக உள்ள விடயங்கள் மற்றும் காரணிகள் தொடர்பிலும் கருத்துரை வழங்கப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
10
12
1927



விண்ணில்
28
03
2023

## திருமதி ஆறுமுகம் தங்கம்மா

புங்குடுதீவு02 ஐ பிறப்பிடமாகவும், கொழும்பில் வசித்தவரும், தற்போது இல.2A டி பொன்சேகா பிளேஸ், பம்பலப்பிட்டி, கொழும்பில் வசித்தவருமான திருமதி ஆறுமுகம் தங்கம்மா அவர்கள் நேற்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமனாதர் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரவாகு - கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் திலோத்தமை (திலகம் - கொழும்பு), கௌரி (ஜேர்மனி), கனகேஸ்வரி (Swiss), உதயகுமார் (கொழும்பு, உரிமையாளர் - ABI Fashion World Jaffna. ABI Traders Colombo), சோதிஸ்வரி (Denmark), காலஞ்சென்ற சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தெய்வேந்திரம், நமநாதன், மஞ்சுளா, ராஜேந்திரன் ஆகியோரின் மாமியாரும், காலஞ் சென்றவர்களான விசுவலிங்கம் மருதலிங்கம், காமாட்சி மற்றும் கமலாம்பிகை (புங்குடுதீவு) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர், ஐயாத்தபிள்ளை, தவராசா, சிவகுரு மற்றும் முருகையா (USA) ஆகியோரின் மைத்துனியும், நந்திவர்மன் (ஈசன்), நந்தினி (சக்தி), யசோதா (துளசி), காலஞ்சென்ற சுபாசினி, கவிதா, சஞ்சீப், சந்துரு, பல்யா, கிஷோக், யஷோக், அபிஷோக், ஜனார்தன், துளசிகா, சோமிகா ஆகியோரின் பேர்த்தியும், பிரியத், யசிந்தி, மேர்வின், அபினயா, அபிசனா, அக்சயன், கிசோன், திசோன், ரிசானா, நிலக்ஷா, யர்சிக்கா, அனோஸ்கா, அனன்யா, வேதா, ஜசாரா, ஜதன், சியாரா, சல்மான், அபிதேவ், ஆருஸ், லோகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல. 2A டி பொன்சேகா பிளேஸ், பம்பலப்பிட்டி கொழும்பு - 4 இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 222 4970 (உதயகுமார்)
077 895 6419

தகவல்
குடும்பத்தினர்

(CR 39518) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையினரின் பாதுகாப்புடன் எரிபொருள்கள் விநியோகம்



கொழும்பு, மார்ச் 29
பொலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் கொலன்னாவை எரிபொருள் முனையத்திலிருந்து எரிபொருள் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக எரிபொருள் விநியோகம் தடைப்பட்டிருந்தது. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசைகளில் நிற்க ஆரம்பித்தனர். இந்த நிலையிலேயே பொலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் கொலன்னாவை எரிபொருள் முனையத்திலிருந்து எரிபொருள் விநியோகம் மீண்டும் நேற்றிரவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால், தேவையற்ற விதமாக மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் நிற்கவேண்டாம் என்று அமைச்சர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ம)

## திரிசாரணருக்கு சின்னம் சூட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ். இந்து திரிசாரணர் குழுவின் 6 சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களான வைத்தீஸ்வரன், கோகுலரமணன், சிவசங்கர், நிமல், டினுசாந்தன், கோபிராம் ஆகிய சாரணர்கள் திரிசாரணர்களாக உறுதியேற்பு எடுத்துக்கொண்டனர்.
நிகழ்வில் யாழ். மாவட்ட முன்னாள் சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சன், யாழ் மாவட்ட சாரண உதவி மாவட்ட ஆணையாளர்களான கோ.சத்தியன் மற்றும்துற்ஜெயந்தன், சாரணர் தலைமை செயலக உதவி ஆணையாளர் அமல்ராஜ், யாழ் இந்துக் கல்லூரி சாரண ஆசிரியர் நிதர்சன், யாழ். இந்து திரிசாரண ஆசிரியர் சுஜீவன் ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்கு சின்னங்களை சூட்டினர். (ச)

## தந்தை செல்வாவின் 125ஆவது ஜெயந்தி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்ததின நிகழ்வுகள், தந்தை செல்வா கலையரங்கத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் மாலை 6.20 மணி வரை நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் "மலையக மக்களின் மனித உரிமைகள்" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவை சமூக அபிவிருத்திக்கான நிறுவன நிர்வாக இயக்குநர் பெரியசாமி முத்துலிங்கம் ஆற்றவுள்ளார்.
அதனைத்தொடர்ந்து தந்தை செல்வா நினைவுப்பேருரையை "13ம் திருத்தச்சட்டம் மீதான ஒரு பிரதிபலிப்பு" எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் ஆற்றவுள்ளார். (ஒ-14,20)

## டெங்குக் கட்டுப்பாட்டு களப் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
தேசிய டெங்கு கட்டுப்பாடு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 4ஆம் திகதிவரை யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறவுள்ளது. (ச)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 08 - 1940



மறைவு 28 - 03 - 2023

### அப்புத்துரை கனகம்மா

வேலணை மேற்கு, வேலணையை பிறப்பிடமாகவும் சரவணை மேற்கை வசிப்பிடமாகவும், 8ம் கட்டை துர்க்காபுரம் தெல்லிப்பழையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை கனகம்மா நேற்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு முத்துப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்புத்துரையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, பூமணி, மகேந்திரன், நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்; சிவராசா, தனக்குமார் (கண்ணன் களஞ்சியம்-கோண்டாவில்), யோகாம்பிகை, ஞானாம்பிகை, சிவரஞ்சினி, காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலாம்பிகை, ஆனந்தி, செல்வராசா, கணேசன்(சிறி), தவிசாளன்(தீபன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, தம்பையா, நாகம்மா, நாகலட்சுமி, கண்மணி, காமாட்சி ஆகியோரின் மைத்துனியும், லதா, நந்தா, சுகந்தி, நிரஞ்சன்(கண்ணா), சயந்தினி(France), குமணநாத்(ஆசிரியர்- புற்றளை ம.வி), மயூரி(உப தபாலதிபர்- சரவணை), அருள்நாத், அமுதினி, பிரியநாத், றாஜினி, வினோ, வினோதினி, விஜயராஜ், கோபிராஜ், பகீரதன், காலஞ்சென்ற பாணுசன், துஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் , சாருகா, தர்மிகா, தருணிகன், ரக்ஷிகன், அக்ஷினி, அக்ஷனா, அக்ஷயன், அக்ஷயா, சஞ்சனா, கஜித், சாய்ராம், ராஜ்பரணி, மகிஷா, கிஷான், ஓவியா, தர்சன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2023) புதன்கிழமை 8ம் கட்டை, துர்க்காபுரம் தெல்லிப்பளையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**076 7038 946(மகன்)**
**077 4785 831**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 06 - 1949



மறைவு 28 - 03 - 2023

### சிவராசா பரமேஸ்வரி

யாழ்.புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தை (மடத்துவெளி) பிறப்பிடமாகவும் இல.923, திருநகர் வடக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா பரமேஸ்வரி நேற்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவராசா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அவர்களின் அன்பு மனைவியும், சுகாசினி (அனர்த்த முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி), தினேஸ்குமார் (ஆசிரியர்- வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்), சதீஸ் (ஆசிரியர் - கிளி/கரியாலை நாகபடுவான் இல.02, அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் பாலசிங்கம் (உதவி பொலிஸ் அத்தியட்சகர்), கணேசம்மா, அமரர் காங்கேசம்மா, சூரியகுமார் (மருத்துவ உத்தியோகத்தர், ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை- வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கணேந்தினி (ஆசிரியை - யா/இணுவில் மத்திய கல்லூரி), நிரோஜனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிசாயினி, அஸ்மிகா, அபிஜித், அஸ்றிதா, சாய்ஸ்ரீ, ஆதர்ஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருநாவுக்கரசு, ஜெயசித்திரா (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், கச்சேரி, வவுனியா), யோகேஸ்வரி - தனுஷ்கோடி, சிவசுந்தரலிங்கம் - தனயோகேஸ்வரி (ஜேர்மனி), ஞானேஸ்வரி - இராசலிங்கம் (ஜேர்மனி), கமலேஸ்வரி - சுந்தரமூர்த்தி, சிவகுமார் - பேரின்பவதனி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி - உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2023) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**923, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.**
**021 228 3625**
**சதீஸ் (மகன்)-077 835 9773,**
**தினேஸ்குமார் (மகன்)-070 5893 514**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 22569) 1/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
01 - 04 - 1944



விண்ணில்
24 - 03 - 2023

## ஜோசப் ஜேசுதாசன் (நேசதுரை)

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடத் திணைக்களம்)**

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் நோர்வே பேர்கனை வதிவிடமாகவும் கொண்ட ஜோசப் ஜேசுதாசன் (நேசதுரை) கடந்த (24.03.2023) வெள்ளிக்கிழமை அன்று நோர்வேயில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் எலிசம்மா(மாதா) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், விக்டோரியா தம்பதிகளின் அருமை மருமகனும், கெலன்(நோர்வே) அவர்களின் அன்புக் கணவரும், பிராங்கிளின்(நோர்வே) அவர்களின் பாசமிகு தந்தையும், லியோ பிரகாசியம்மா(தவமணி) மற்றும் காலஞ்சென்றவர்களான டேவிட்(ஓய்வு பெற்ற தபால் அதிபர் கொழும்பு), டெய்சி இராஜேந்திரம்(கொழும்பு), அருளானந்தம் (துரை) ,றிச்சாட்(பெயின்ரர்) மற்றும் அல்பிரட்(றேனுகா றெக்ஸ்றைல்ஸ் கொழும்பு) ஆகியோரின் பாசமிகு இளைய சகோதரனும், கவிதா(நோர்வே) அவர்களின் பாசமிகு மாமனாரும், பிரவின், ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் அனற் யூலியற் புஸ்பராஜா(ஜெயந்தி-டென்மார்க்) அவர்களின் வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.03.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இரங்கல் திருப்பலியுடன் நோர்வேயில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.04,றக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பெறாமகள், மருமகன்**
**(திரு,திருமதி தர்மகுலசிங்கம்**
**அனற்மேரி மெற்றில்டா)**

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
10 . 12 . 1927



மறைவு
26 . 03 . 2023

## திருமதி ஆறுமுகம் தங்கம்மா

அவர்கள் கடந்த 26.03.2023 அன்று காலமான செய்தியறிந்து துயருறுவதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவினால் துயருறும்**

**Abi Fashion World**
**112, K.K.S. Road, Jaffna.**
**021 222 3738**

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை சரஸ்வதி



**தோற்றம் : 23.09.1917 மறைவு : 28.03.2023**

தொல்புரம் கிழக்கு, துரையன் வளவு, பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சரஸ்வதி நேற்று (28.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து, லக்ஸ்மி தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், திலகவதியின் அன்புச் சகோதரியும், சண்முகலிங்கம், தவலட்சுமி, வள்ளியம்மை, கணேசராசா, புஸ்பராசா, புஸ்பலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசகுமாரன், குசலகுமாரன், சுகிதகுமாரன், நந்தகுமாரன், இளங்குமாரன் ஆகியோரின் பெரியம்மாவும், இந்திராணி, தாமோதரம்பிள்ளை, கணேசு, ஜெயசாந்தி, இந்திராதேவி ஆகியோரின் மாமியாரும், நாகலிங்கம் கந்தமுத்து சிவராசா, நாராயணபிள்ளை, வீரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், தேவகி, திரிவேணி, கிருஸ்ணா, தர்சினி, தவமன்னன், மோகனா, புவிச்செல்வம், தமயந்தினி, புஸ்பதீபன், லக்ஸன், கேசவன், கஜேந்தினி, ஜீவராஜ், நிருஜா, நிவேதினி, மிதுஷா, பிரவீனா ஆகியோரின் பேர்த்தியும், பவனுஜெயன், லக்ஷிகா, வாயித்தியா, கேசீகன், தரணியா, நயனோதயன், சிவாங்கி, பிருத்திகா, ஆதவன், ஹரிகரன், அக்ஷயா, தேசிகன், அக்ஷயன், கபிநயா, சுருதி, கவின், ஆதித்யஹரிகாலன், துளசிகா, கோபிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2023) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 958 4607**
**077 774 1693**
**077 160 6583**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்காவுக்குள்...

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும் தென்னாபிரிக்காவில் தற்போது முகாமிட்டுள்ளனர். கறுப்பினத்தவர்களுக்கு எதிராக தென்னாபிரிக்காவில் நிலைகொண்டிருந்த இன மற்றும் நிறவெறியில் இருந்து தென்னாபிரிக்கா எவ்வாறு மீண்டது என்பது தொடர்பாகவும், இதற்காகத் தென்னாபிரிக்கா அமைத்த 'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு' தொடர்பாகவும் புரிதல்களை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் தென்னாபிரிக்க அமைச்சர் நலெடி பண்டுரினின் அழைப்பின் பேரில் அவர்கள் அங்கு சென்றுள்ளனர். இந்த நிலையிலேயே, தென்னாபிரிக்காவுக்கு வந்துள்ளவர்கள் போர்க்குற்றவாளிகள் அல்லது போர்க்குற்றவாளிகளை ஆதரிப்பவர்கள் என்று தென்னாபிரிக்காவில் இயங்கும் மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பில் தென்னாபிரிக்க மனித உரிமைகள் அமைப்புக்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் உள்ளதாவது:-

1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையான உள்நாட்டுப் போரின்போது இழைக்கப்பட்ட மோசமான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது. இவ்வாறானவர்களை எமது நாட்டுக்கு வரவழைத்த தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அழைப்பு கவலையளிக்கின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக, பாரதூரமானதும் மனித உரிமைகளுக்கு முற்றிலும் ஒவ்வாததுமான குற்றங்களை ஐக்கிய நாடுகள் சபை சுமத்தியுள்ளது. தென்னாபிரிக்காவுக்கு அழைக்கப்பட்டுள்ள இரண்டு அதிகாரிகளும் பாரதூரமான போர்க்குற்றங்கள் புரிந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள். தென்னாபிரிக்காவுக்கு வந்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கோத்தாபய ராஜபக்சவின் தனிப்பட்ட சட்டத்தரணி. அவருக்காக பல ஊழல் வழக்குகளில் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார். எனவே, இத்தகையவர்களை நாட்டுக்குள் அழைத்தமை தவறு - என்றுள்ளன. (அ-ம)

## யாழ்...

பிடுங்கி வீசப்பட்டதற்கு யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் உள்ளதாவது:-

வவுனியா மாவட்ட எல்லையிலுள்ள வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் திருத்தல புனித சின்னங்களை சிதைத்தமையும், அப்புறப்படுத்தியமையையும் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்து சமயம் இலங்கையின் தொன்மைமிகு மதம் என்பதையும் இலங்கையின் வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் பல பாடல் பெற்ற சைவ சமய வணக்கத்தலங்களும், பழைமை வாய்ந்த வழிபாட்டிடங்களும் உள்ளன என்பதை மற்றெல்லா மதத்தவரும் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்.

ஒரு சமயத்தவரது பழமைவாய்ந்த மதத்தலத்தை அகற்றுவது அல்லது சிதைப்பது அல்லது அவசங்கைப்படுத்துவது மதநல்லிணக்கத்துக்கு ஒருபோதும் உதவப்போவதில்லை. அண்மைக்காலமாக சில இந்து மத வணக்கத்தலங்கள் இவ்வாறு பெரும்பான்மை சமயத்தவரால் அழிக்கப்படுவது வேதனையளிப்பதாகவுள்ளது.

இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெறும்போது சட்டத்தையும், ஒழுங்கையும், நீதியையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் ஒன்றும் நடைபெறாததுபோல செயற்படாதிருப்பது நாட்டுக்கும், மக்களுக்கும், நீதிக்கும், சமாதானத்துக்கும் நல்லதல்ல.

இலங்கையில் பௌத்தர்கள் பெரும்பான்மையினர் என்ற கூற்றை அடிப்படையாகக்கொண்டு நாட்டில் தாம் விரும்பிய இடத்தில் தொன்மைமிக்க இந்து ஆலயங்கள் இருந்தாலும் அவற்றை அகற்றிவிட்டு பௌத்தர்கள் தமது விகாரைகளை அமைக்கலாம் என்ற எண்ணப்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இவ்வாறாக அண்மைக்காலமாக குருந்தூர்மலை விவகாரம், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை விவகாரம், கச்சதீவில் புதிதாகப் புத்தர்சிலை வைக்கப்பட்டமை ஆகிய செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளமுடியாது. இதுபோன்ற செயற்பாடுகள் நிறுத்தப்படுவதற்கு, உடன் காத்திரமான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்க வேண்டும்.

மீண்டும் மிக விரைவில் சிதைக்கப்பட்டு, அகற்றப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயச் சின்னங்கள் இந்து மத நெறிகளின்படி பிரதிஷ்டை செய்யப்பட வேண்டுமென்றும் இந்து சமயத்தின் தொன்மைத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றோம். இதையே இந்துக்களும், இந்துக்களின் தொன்மைமிகு வரலாற்றுப் பின்னணியையும், இலங்கையில் சமய நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் விரும்பும் எல்லா மக்களும் எதிர்பார்த்து நிற்கின்றனர் - என்றுள்ளது. (அ-ம)

## நீதிகோரி...

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிசிவன்கோவில் அழிக்கப்பட்டமைக்கு எதிராகவும், கடந்த சில மாதங்களாக குருந்தூர்மலை, கன்னியா உட்பட ஆதிசிவன் கோவில்கள் பௌத்த மரபுரிமைகளாக, விகாரைகளாக மாற்றப்படுவதைக் கண்டித்தும் தமிழ்ச் சைவப் பேரவை, அகில இலங்கை சைவமகா சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் நல்லூர் ஆதீனத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கீரிமலை மெய்கண்டார் ஆதீன முதல்வர் உமாபதிசிவம் அடிகளார், அருட்தந்தை ஜெயந்தன் அடிகளார், தமிழ்ச் சைவப் பேரவையின் தலைவரும், முன்னாள் நீதிபதியுமான இ.வசந்தசேனன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத்தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம், அகில இலங்கை சைவமகாசபையின் தலைவர் நா.சண்முகரத்தினம், அகில இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலாளர் மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார், இலங்கை முதலுதவிச் சங்கத் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ், சமூக விஞ்ஞான ஆய்வுமைய இயக்குநர் சி.அ.யோதிலிங்கம், யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினர்களான வ.பார்த்தீபன், ப.தர்சானந்த், சாவகச்சேரி பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் வை.ஜெகதாஸ், சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், தமிழ் சைவப் பேரவை மற்றும் அகில இலங்கை சைவமகாசபையின் உறுப்பினர்கள், சமய, சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பேரினவாதமே சைவ மக்களின் மனங்களை வதைப்பதை நிறுத்து, அரசே, நிலஅபகரிப்பை நிறுத்து, சர்வதேசமே இலங்கையில் தொடரும் இன, மத அழிப்புக்கு எதிராக உடனடியாகத் தலையிடு உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-66)

## போதை...

போதைப்பொருள் மாபியாக்கள் தொடர்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தகவல் எவரால் சொல்லப்பட்டதோ அவர்கள் தொடர்பான தகவல்கள் போதைப்பொருள் மாபியாக்களுக்கு வழங்கப்படுகின்றன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு மற்றும் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சிறி மோகன், பிரதேச செயலர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். கலந்துரையாடலில், சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் தொழிலாளர்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவயதுக் கர்ப்பம், போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, 'போதைப்பொருள் பாவனை மாணவர்கள் மத்தியில் பரவுவதைக் கட்டுப்படுத்தியுள்ளோம். பாடசாலைகளுக்கு முன்பாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுகின்றனர். ஆயினும் அவர்கள் பிணையில் வெளிவந்து மீண்டும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர்' என்று பொலிஸார் சுட்டிக்காட்டினர். இதையடுத்தே, 'பொலிஸாருக்கு போதைப்பொருள் மாபியாக்கள் தொடர்பில் தகவல்களை வழங்கினால், யார் இந்தத் தகவல்களை வழங்கியவர்கள் என்பது தொடர்பான விடயங்கள் போதைப்பொருள் மாபியாக்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன' என்று அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி தெரிவித்தார். குறிப்பாக ஆனைவிழுந்தான் கிராமத்தில் இந்த நிலைமை காணப்படுகின்றதாக அவர் சுட்டிக்காட்டினார். இதற்கு, 'எமது வாகன இலக்கத்தகடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் போதைப்பொருள் மாபியாக்களிடம் இருக்கின்றன' என்றும் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-113)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு:**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 132 உள்ளன.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை
- **பார்வையிடும் நேரம்:** காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.
- தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு:- ஜெயம்**

**077 814 7389**
**077 986 5457**

(GS 22535) I/6

## ஆளுநருக்கு...

வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் செயலக முன்றிலில் நேற்று மு.ப. 10 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெற்றது. 'ஆளுநர் என்ற பதவிக்காக தமிழர்களை விற்காதே', 'தமிழர் கலாசார அடையாளங்கள் புத்தசாசன அமைச்சின் கீழ் எதற்கு?', 'தமிழர் கலாசாரத்தைச் சிதைக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் கைக்கூலியாகச் செயற்படாதே' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறும் குரல்களை எழுப்பியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை- நாவலர் கலாசார மண்டபம் வடக்கு மாகாண ஆளுநரால் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டமைக்கு எதிராக யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்களின் கையெழுத்து அடங்கிய மனுவொன்றும் நேற்றுக்காலை ஆளுநர் செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

(அ-ம-26,20,66)


### வேலையாட்கள் தேவை

யாழ். கே. கே. எஸ். வீதியில் இயங்கி வரும் தையல் நிலையத்திற்கு தையல் தெரிந்த / பழக விரும்புவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 611 4022

### DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள்

3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்




திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28

குறிப்பு: வேலையாட்கள் தேவை.

### வான் விற்பனைக்கு

Toyota (Town Ace)
CR 42 Model இலக்கம் (NP PExxxx)
உடன் விற்பனைக்குண்டு.
077 321 3283,077 712 0945

### பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் யூஸ் தயாரிப்பு நிலையத்துக்குப் பழச்சாறு தயாரிக்கும் அனுபவமுள்ள பணியாளர் தேவை.

076 553 0813

### சமையலாளர் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

070 356 7811

### நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

லயன் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
வயது:- 10 மாதம்
ஆறு தடுப்பு ஊசிகளும் ஏற்றப் பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:
021 205 1648, 077 117 8618

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்புக் காணி விற்பனைக்கு

**மேட்டு நிலம் (நிலப்பரப்பு)**




கோல்டன்
ரியல் எஸ்டேட் (பிரைவேட்) லிமிட்டட்

**Golden**
Real Estate (Pvt) Ltd




- * யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து 100 M தூரத்தில்.
- * 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- * குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
- * நன்னீர் ஊற்று நிலம்.
- * ஒருபரப்பின் விலை (300,000/-) மூன்று இலட்சம் மற்றும் (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- * விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி.
- * பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரம். சோமாஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 KM தூரம்.
- * பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

Owner@Director.
T.Kalaithasan(Karan)

076 733 6047
076 333 6079
076 733 6093
Office No.:021 3155 900


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்செழுப் பகுதியில் 35 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✔ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- ✔ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ✔ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- ✔ 1 பரப்பின் விலை
  காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்
  18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல்
மாலை 6 மணிவரை.




தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் திசவ அழைப்பும்

மண்ணில் 27 . 07 . 1944



விண்ணில் 08 . 04 . 2022

## அமரர் இராசதுரை இராசமுத்து

எமது குடும்பத் தலைவி அமரர் இராசதுரை இராசமுத்து அவர்களின் முதலாம் ஆண்டு திவசம் இன்று (29.03.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் (345, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மா என்ற சொல்லின் சூட்சுமம் நீ
குடும்பத் தலைவியாய் எங்கள்
வழிகாட்டியாய் நீ இருந்தாய் அம்மா...
பாசத்தின் உறைவிடம் அம்மா நீ
நல்லதேசத்தின் இருப்பிடமும் நீ
கருணையின் பிறப்பிடம் நீ.
எம்மை அன்பாய் ஆட்சி செய்தவள் நீ
ஓராண்டு ஓடி ஒழிந்தது அம்மா
நித்தமும் உம் நினைவுகள்
எம் மனதில் அம்மா.....
ஆறுதல் கூற ஆயிரம்
வார்த்தைகள் இருந்தும் என்ன அம்மா
பரிவுடன் நீ காட்டிய அன்பினை இனி
எவர்தான் எமக்கு கொடுப்பார் அம்மா
உம் ஆத்மா சாந்தியடைய
எம்மை என்றும் வழிநடத்த அனுதினமும்
இறையருள் வேண்டுகின்றோம்.

26/1, நாயன்மார் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**
021 222 9081, 077 110 3322


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.